# 1 பொம்மை நாடகம்

அப்பா செருப்புத் தைப்பவர்; அம்மா துணி வெளுப்பவள். அவர்களுக்கு ஒரு பையன். அவன் பள்ளிக் கூடத்துக்கு ஒழுங்காகப் போகமாட்டான். அப்படியே போனாலும், பாடங்களைச் சரியாகக் கவனிக்கமாட்டான். எப்போதும், ஏதாவது கனவு கண்டுகொண்டேயிருப்பான்.

அவன் அப்பாவுக்கு அவனிடத்திலே பிரியம் அதிகம். அவர் அவனுக்குப் பொம்மை நாடகமேடை ஒன்றைச் செய்து கொடுத்தார். அதில் அந்தப் பையன் சில பொம்மைகளை நிறுத்திவைப்பான். சும்மா நிறுத்தி வைக்க மாட்டான்; அலங்காரமான உடுப்புகளுடனே நிறுத்தி வைப்பான்; தையற்கடையில் கிடைக்கும் துண்டுத் துணிகளைக்கொண்டே மேல் சட்டை, கால் சட்டை, தொப்பி முதலியவற்றைத் தயார் செய்து பொம்மை களுக்குப் போடுவான்.

அவன் தயாரிக்கும் உடைகள் மிகவும் அழகாயிருக்கும். அவனுடைய தையல் வேலையைப் பார்த்து, 'நம்முடைய மகன் பெரியவனானதும், ஒரு பெரிய தையற்காரன் ஆகி விடுவான்' என்று அம்மா நினைத்தாள். ஆனால், அவள் நினைத்தபடி நடக்கவில்லை.

அந்தப் பையன் பொம்மைகளை வைத்துத் தினமும் நாடகம் நடத்துவான். மேடையில் நிற்கும் பொம்மைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நடிகராக நினைத்துக் கொள்வான். அந்த நடிகர்களுக்குத் தகுந்தபடி நாடகம் வேண்டாமா? உடனே, அவன் தானகவே கற்பனை செய்து நாடகம் தயாரிப்பான். பொம்மை நடிகர்கள் ஒவ்வொரு வரும் நடிப்பது போலக் கனவு காண்பான்.

இந்தப் பழக்கம் வளர்ந்துகொண்டே வந்தது. கொஞ்ச காலம் சென்றதும், கதைகள், நாடகங்கள் எழுத வேண்டும்

# 2 பெண் வேஷம்

ஒரு பணக்காரருக்குச் சில பெண் குழந்தைகள் இருந்தார்கள். அந்தக் குழந்தைகளை அவர் வெளியில் அனுப்பவே மாட்டார். வீட்டுக்குள்ளேயே அடைத்து வைப்பார். ஆண் குழந்தைகளுடன் அவர்கள் பேசக்கூடாது; சேர்ந்து விளையாடக் கூடாது என்பது அவரது கண்டிப்பான உத்தரவு.

அந்தப் பணக்காரர் வீட்டுக்குச் சமீபத்தில் ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டிலே ஒரு சிறு பையன் இருந்தான். அவனுக்கு அந்தப் பணக்காரருடைய போக்கு பிடிக்கவில்லை. ஒரு நாள் அந்தப் பணக்காரரிடத்திலே இதைக் கூறி விட்டான். உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் அப்படித்தான் செய்வேன். எங்கே எந்தப் பயலாவது என் பெண்கள் இருக்கும் இடத்திற்குப் போய்விடட்டும், பார்க்கலாம்" என்று வீறாப்புப் பேசினார்.

''ப்பூ, என்ன பிரமாதம்! நானே போய்க் காட்டு கிறேன்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான் அந்தப் பையன். அவன் ஏதோ விளையாட்டாகச் சொல்கிறான் என்றே பணக்காரர் நினைத்தார். ஆனால், அவன் அதைக் காரியத்திலே காட்டிவிட்டான்.


ஒரு நாள் மாலை நேரம். அந்தப் பையன் ஒரு சிறுமி யைப் போல் அழகாக வேஷம் போட்டுக்கொண்டான். வேஷம் அவனுக்கு மிக மிகப் பொருத்தமாக இருந்தது. அப்போது யாராலுமே அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. அந்த வேஷத்துடன் அவன் பணக்காரர் வீட்டுக்குப் போனான். பணக்காரரின் முன்னே போய் நின்றான். ''ஐயா, நான் பக்கத்து ஊர்க்காரி. இந்த ஊர்ச் சந்தைக்கு வந்தேன். என் கூட வந்தவர்கள் என்னைத் தனியாக விட்டுப் போய்விட்டார்கள். இருட்டிப் போனதால் ஊருக்குப் போகப் பயமாயிருக்கிறது. இன்று இரவு

என்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. அவன் பல கதைகள் எழுதினான்; நாடகங்கள் எழுதினான். அவை எல்லாம் மிகவும் நன்றாக இருந்தன. ஆனாலும், எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் ஏராளமாக இருந்தன. 'பள்ளிக்கூடத்தில் சரியாகப் படிக்காமல் போனோமே!' என்று அப்போது அவன் வருந்தினான். ஆனாலும், முயற்சியை விடவில்லை. நாளடைவில் தவறு இல்லாமல் எழுதக் கற்றுக் கொண்டுவிட்டான்.

அவன் குழந்தைகளுக்காக எழுதிய கதைகள் பல. அந்தக் கதைகளைப் படித்துப் படித்துக் குழந்தைகள் ஆனந்தமடைய வேண்டும் என்பதுதான் அவனது ஆசை. அந்த ஆசை வீண் போகவில்லை. அவன் பிறந்த டென்மார்க் தேசத்துக் குழந்தைகள் மட்டுமல்ல; உலகத்திலுள்ள பல தேசத்துக் குழந்தைகளும் அவனுடைய கதைகளைப் படித்து ஆனந்தம் அடைகிறார்கள். நீங்களும் அவனுடைய கதைகளைப் படித்து ஆனந்தம் அடைய வேண்டாமா?

''அவனுடைய பெயரைச் சொன்னால்தானே அவன் எழுதிய கதைகளைப் படிக்க முடியும்?'' என்று கேட்கிறீர்களா?

இதோ அவனுடைய பெயரைச் சொல்லிவிட்டேன். **ஹான்ஸ் கிறிஸ்தியன் ஆண்டர்சன்** என்பதுதான் அவனுடைய பெயர்!



# 2 பெண் வேஷம்

ஒரு பணக்காரருக்குச் சில பெண் குழந்தைகள் இருந்தார்கள். அந்தக் குழந்தைகளை அவர் வெளியில் அனுப்பவே மாட்டார். வீட்டுக்குள்ளேயே அடைத்து வைப்பார். ஆண் குழந்தைகளுடன் அவர்கள் பேசக்கூடாது; சேர்ந்து விளையாடக் கூடாது என்பது அவரது கண்டிப்பான உத்தரவு!

அந்தப் பணக்காரர் வீட்டுக்குச் சமீபத்தில் ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டிலே ஒரு சிறு பையன் இருந்தான். அவனுக்கு அந்தப் பணக்காரருடைய போக்கு பிடிக்கவில்லை. ஒரு நாள் அந்தப் பணக்காரரிடத்திலே இதைக் கூறி விட்டான். உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் அப்படித்தான் செய்வேன். எங்கே எந்தப் பயலாவது என் பெண்கள் இருக்கும் இடத்திற்குப் போய்விடட்டும், பார்க்கலாம்" என்று வீறாப்புப் பேசினார்.

''ப்பூ, என்ன பிரமாதம்! நானே போய்க் காட்டு கிறேன்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான் அந்தப் பையன். அவன் ஏதோ விளையாட்டாகச் சொல்கிறான் என்றே பணக்காரர் நினைத்தார். ஆனால், அவன் அதைக் காரியத்திலே காட்டிவிட்டான்.

ஒரு நாள் மாலை நேரம். அந்தப் பையன் ஒரு சிறுமி யைப் போல் அழகாக வேஷம் போட்டுக்கொண்டான். வேஷம் அவனுக்கு மிக மிகப் பொருத்தமாக இருந்தது. அப்போது யாராலுமே அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. அந்த வேஷத்துடன் அவன் பணக்காரர் வீட்டுக்குப் போனான். பணக்காரரின் முன்னே போய் நின்றான். ''ஐயா, நான் பக்கத்து ஊர்க்காரி. இந்த ஊர்ச் சந்தைக்கு வந்தேன். என் கூட வந்தவர்கள் என்னைத் தனியாக விட்டுப் போய்விட்டார்கள். இருட்டிப் போனதால் ஊருக்குப் போகப் பயமாயிருக்கிறது. இன்று இரவு

மட்டும் இங்கே தங்குவதற்கு இடம் கொடுப்பீர்களா?" என்று தயவாய்க் கேட்டான்.

பணக்காரரின் மனம் உடனே இளகிவிட்டது. "சரி வா" என்று பெண் வேஷத்திலிருந்த அந்தப் பையனை அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த பெண்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பணக்காரருடைய பெண்களும் அவனை ஒரு பெண் என்றே நம்பிவிட்டார்கள். அவனிடம் அன்பாகப் பேசினார்கள். தின்பதற்குப் பலகாரங்கள் கொடுத்தார்கள். அவனுடன் சேர்ந்து விளையாடினார்கள். மூன்று மணி நேரம் இப்படி ஓடிவிட்டது.

அப்போது, "தம்பி! தம்பி!" என்ற குரல் தெருவிலிருந்து வந்தது. அந்தக் குரலைக் கேட்டதும், பெண் வேஷத்திலிருந்த அந்தப் பையன், "அண்ணா, இதோ வந்துவிட்டேன்!" என்று கூறிக்கொண்டே எழுந்தான். தன்னைத் தேடிக்கொண்டு வந்த அண்ணன் வாசலில் நிற்பதைக் கண்டான். உடனே வாசலை நோக்கி ஓடினான். அப்போதுதான் எல்லாருக்கும் உண்மை தெரிந்தது. அவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்கள். அன்று முதல், அந்தப் பணக்காரர் பெண்களை வீட்டுக்குள் அடைத்து வைப்பதே இல்லை.

அன்று மாறுவேஷம் போட்டுப் பணக்காரரின் மனத்தை மாற்றிய அந்தப் பையனின் பெயர் உங்களுக்குத் தெரியுமா? 'கதாதரன்' என்பதுதான் அவனுடைய பெயர். அந்தப் பெயர்தான் பிற்காலத்தில் **ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்** ஆகிவிட்டது!